செய்தி வெளியீடு எண். 160 நாள். 22.03.2018

**பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை சார்ந்த கணக்கெடுப்பாளர்களுக்கு உரிய விவரங்கள் அளித்து ஒத்துழைக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மூலமாக, வயது முதிந்தோரின் (55 வயது மற்றும் அதற்கு மேல் உள்ளோர்) சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு (Panel Survey on Elderly Population) மற்றும் குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு (Tamil Nadu Household Panel Survey (TNHPS) நடைபெற உள்ளது. வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு J. Pal என்ற நிறுவனத்துடன் இணைந்தும், குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு (Tamil Nadu Household Panel Survey (TNHPS)) Madras Institute of Development Studies (MIDS) Chennai மற்றும் University of Michigan என்ற நிறுவனங்களுடன் இணைந்தும் பொருளியல் மற்றும் புள்ளிஇயல் துறையால் கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

மேலும், வயது முதிர்ந்தோர் ஆய்வு மூலம், உடல் நலம், மனநலம், சமூக அந்தஸ்து மற்றும் பொருளாதார நிலை குறித்த விவரங்கள் சேகரிக்கப்படும். குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு (Tamil Nadu Household Panel Survey (TNHPS) மூலம் குடும்பங்களின் கட்டமைப்பு, கல்வி, வேலை, வருவாய் மற்றும் செலவினம் விவரங்கள் சேகரிக்கப்படும்.

எனவே, மேற்காணும் கணக்கெடுப்புகளுக்கு வரும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை சார்ந்த கணக்கெடுப்பாளர்களுக்கு உரிய விவரங்களை அளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**